நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 420 / 2025

CNR.No.TNTT07–003976–2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண்.225/2025 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரிகளின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | 1. ஞானமணி<br>2. மைக்கல் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | 1. ராஜ்<br>2. அமிர்தம் |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | 1. NGO காலனி, தாமஸ் நகர், இலுப்பையூரணி, கோவில்பட்டி.<br>2. தாமஸ் நகர், NGO காலனி, இலுப்பையூரணி, கோவில்பட்டி. |
| 7 | வயது | 1. 51/2025<br>2. 49/2025 |
| தேதி | | |
| 8 | சம்பவம் | 10.05.2025 |
| 9 | புகார் | 14.05.2025 |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:01:58 +0530

| | | |
|---|---|---|
| 10 | எதிரியின் கைது விபரம் | 1 வது எதிரி கடந்த 13.05.2025 அன்றும், 2 வது எதிரி கடந்த 12.05.2025 அன்றும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 11 | பிணை விபரம் | 1 வது எதிரி கடந்த 13.05.2025 அன்றும், 2 வது எதிரி கடந்த 12.05.2025 அன்றும் காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 14.08.2025 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 23.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 வது எதிரியை BNS பிரிவுகள் 127(2), 296(பி), 296(பி) r/w 3(5), 329(4), 351(2) படியும், 2 வது எதிரியை 127(2), 296(பி)(2 எண்ணிக்கைகள்), 329(4), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை விடுதலை செய்து BNSS பிரிவு 271(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 15.07.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 23.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:02:04 +0530

**தீர்ப்புரை**

**எதிரி மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 10.05.2025 ஆம் தேதி காலை 08.45 மணிக்கு கோவில்பட்டி இலுப்பையூரணி தாமஸ் நகர் கைவண்டி தொழிலாளர் காலனி NGO காலனியில் உள்ள சாட்சி 1 ஷோபாவின் வீட்டில் சாட்சி 1, சாட்சி 2 சஞ்சய் மற்றும் சாட்சி 3 சரண்யா ஆகியோர்கள் இருக்கும் போது மேற்படி சாட்சி 1ன் வீட்டிற்கு முன்பாக 1, 2வது எதிரிகள் தெருவில் நின்று கொண்டு 2வது எதிரி, சாட்சி 1யைப் பார்த்து தேவடியா முண்டா வீட்டை விட்டு வெளியே வாடி, சர்வேயருக்கு பணம் எல்லாம் செலுத்த முடியாது, அப்படி தான் நிலத்தினை பயன்படுத்துவேன் என்று தெருவில் வைத்து ஆபாசமாக பேசவும், சாட்சி 1 எதுக்கு இப்படியெல்லாம் அசிங்கமாகப் பேசுறீங்க, இப்ப எனது கணவர் இல்லை எதுவாக இருந்தாலும், எனது கணவர் வந்தவுடன் பேசிக் கொள்ளுங்கள் என்று சொல்லவும், 2வது எதிரி, சாட்சி 1யைப் பார்த்து உனது கணவர் இருந்தால் மட்டும் மயிரவா புடுங்கிவிடா போகிறான் என்று தெருவில் வைத்து பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து சாட்சி 1யை அசிங்கமாகப் பேசி, சாட்சி 1க்கு மிகுந்த மனஉளைச்சலையும், அவமானத்தையும் ஏற்படுத்தியும், 1வது எதிரி, சாட்சி 1யைப் பார்த்து என்னடி தேவுடியா பத்தினி வேஷம் போடுகிறாயா? என்று ஆபாசமாக பேசி 1, 2வது எதிரிகள் இருவரும் சாட்சி 1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழையவும், அருகில் இருந்த சாட்சிகள் 2, 3, சாட்சி 4 செல்லத்துரை, சாட்சி 5 முனியசாமி, சாட்சி 6 முத்துலட்சுமி ஆகியோர் எதிரிகளை சத்தம் போடவும், எதிரிகள் இருவரும் சாட்சி 1யைப் பார்த்து இன்னைக்கு தப்பிச்சிட்டீங்க என்னைக்கு இருந்தாலும் மேற்படி இடத்தை உரிமை கொண்டாடினால் உங்கள கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(பி), 329(4), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230ன் படி கடந்த 14.08.2025

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:02:09 +0530

அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், 1 வது எதிரி மீது BNS பிரிவுகள் 127(2), 296(பி), 296(பி) r/w 3(5), 329(4), 351(2) படியும், 2 வது எதிரி மீது BNS பிரிவுகள் 127(2), 296(பி)(2 எண்ணிக்கைகள்), 329(4), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 29.08.2025 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து BNSS பிரிவு 263 ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) இந்த வழக்கில் எதிரிகளும், சாட்சி 1 ம் சமாதானமாகி விட்டதாக BNSS பிரிவு 359–ன் கீழ் தாக்கல் செய்த எம்.பி. எண்.7/2026 என்ற மனுவானது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டுகள் என்பதால் இந்நீதிமன்றத்தால் கடந்த 20.07.2026 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

4) எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5) அசா.1 ஷோபா, புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்று மட்டும் சாட்சியமளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட BNSS பிரிவு 348–ன் கீழான எம்.பி.எண்.8/2026 என்ற மனுவானது கடந்த 20.07.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசா.2 அங்குத்தாய் (உதவி ஆய்வாளர்) கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். கடந்த 10.05.2025 ஆம் தேதி 13.00 மணிக்கு பெண் தலைமை காவலர் கனகலட்சுமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா.1 ஷோபா

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:02:14 +0530

என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அசா.ஆ.3 புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப அசா.ஆ.2 நிலைய மனு ரசீது எண்.637/2025 கொடுத்ததை உதவி ஆய்வாளர் பொன்ராஜ் அவர்கள் பார்வையிட்டு அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.225/2025, BNS பிரிவுகள் 296(பி), 329(4), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

6) அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உதவி ஆய்வாளர் பொன்ராஜ், 12.05.2025 அன்று 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேஸ்வரன் மற்றும் தங்கமாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 12.05.2025 மற்றும் 13.05.2025 ஆம் தேதி எதிரிகளை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 14.05.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

7) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 23.07.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

8) அரசுத் தரப்பில், எதிரிகள் சட்டவிரோதமாக தடுத்து வைத்து, அசிங்கமாகத் திட்டி, அத்துமீறி நுழைந்து, கொலை மிரட்டல் விடுத்து, கொடுமை செய்ததாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:02:18 +0530

9) மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகளைத் தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இந்நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 ஷோபா தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். சம்பவ காலத்தில் யார் என்னை கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார்மனு கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. (**அந்த கையெழுத்து மட்டும் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார்.

10) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அசா.1 அவரது குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அசா.1, எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளார். அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் சட்டவிரோதமாக தடுத்து வைத்து, அசிங்கமாகத் திட்டி, அத்துமீறி நுழைந்து, கொலை மிரட்டல் விடுத்து, கொடுமை செய்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:02:24 +0530

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்திலும், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளைத் தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) முடிவில் அரசு தரப்பில் 1வது எதிரி மீது BNS பிரிவுகள் 127(2), 296(பி), 296(பி) r/w 3(5), 329(4), 351(2) படியும், 2வது எதிரி மீது BNS பிரிவுகள் 127(2), 296(பி)(2 எண்ணிக்கைகள்), 329(4), 351(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் அல்ல என BNSS பிரிவு 271(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அதுகுறித்த உத்தரவில்லை.

13) இவ்வழக்கில் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் BNSS பிரிவு 481ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 24 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:02:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திருமதி. ஷோபா | நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி |
| 2. | திருமதி. அங்குத்தாய் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | புலன்விசாரணை குறித்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் மனுவில் உள்ள அசா.1ன் கையொப்பம் – 10.05.2025 | அ.சா.1 – 20.07.2026 | அசல் |
| 2 | புகார் மனு ரசீது – 10.05.2025 | அ.சா.2 – 20.07.2026 | அசல் |
| 3 | புகார் மனு – 10.05.2025 | அ.சா.2 – 20.07.2026 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை – 12.05.2025 | அ.சா.2 – 20.07.2026 | அசல் |
| 5 | பார்வை மகஜர் – 12.05.2025 | அ.சா.2 – 20.07.2026 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் – 12.05.2025 | அ.சா.2 – 20.07.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:02:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி